## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. விஜயகுமார் | அசல் வழக்கு எண். | 14/2017 |
| த/பெ. | - | கண்ணையன் | பி.சா. | 2 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

**04.02.2026**

**குறுக்கு விசாரணை:**

1. வழக்கில் நான் தரப்பினர் இல்லை. நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் எனக்கு வரவில்லை. 1 ம் பிரதிவாதி அழைத்ததின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு விவரங்கள் எனக்கு ஓரளவிற்கு தான் தெரியும் என்றால் சரிதான். எதன் அடிப்படையில் வழக்கு சொத்தின் விவரங்கள் எனக்கு ஓரளவிற்கு தெரியும் என்றால் நான் பக்கத்து பூமியில் இருப்பதால் எனக்கு தெரியும். நான் 1977 ல் பிறந்தேன். எனக்கு 15 வயதிலிருந்து எனக்கு விவரங்கள் தெரியும். எனக்கு 15 வயதிற்கு முன்பு எவ்வாறு வழக்கு சொத்துக்கள் அனுபவம் செய்து வரப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் மற்றும் வழக்கின் பரிகாரம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு அருகில் எனக்கு நிலம் இருப்பதை நிருபிப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்திற்கு அருகில் உள்ளதாக சொல்லும் என்னுடைய நிலத்தின் சர்வே எண், விஸ்தீரணம், சொத்து கிடைத்தற்கான ஆதாரம் ஆகியவற்றை என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் என்னுடைய சொத்துக்களின்

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.02.04 17:39:53 +0530

ஆவணங்களை தாக்கல் செய்திருந்திருந்தால் தான் வழக்கு சொத்திற்கு அருகில் எனக்கு சொத்துக்கள் உள்ளது நீதிமன்றத்திற்கு தெரிய வரும் என்றால் சரிதான்.

3. வாதி மற்றும் பிரதிவாதிகள் 2006 ல் பாகம் பிரித்துக்கொண்டதில் நான் தரப்பினரும் இல்லை என்றும் சாட்சியும் இல்லை என்றால் சரிதான். வாதி மற்றும் பிரதிவாதிகள் எவ்வாறு பாக பிரிவினை செய்து கொண்டனர் என்று எனக்கு நேரடையாக தெரியாது என்றால் சரிதான். வாதி மற்றும் பிரதிவாதிகளின் பூமிகளை நான் குத்தகைக்கு அனுபவம் செய்து வரவில்லை என்றால் சரிதான். அதனால் வழக்கு சொத்திற்கும் வழக்கு தரப்பினர்களின் இதர சொத்துக்களுக்கும் செல்வதற்கு எந்த அவசியமும் இல்லை என்றால் சரிதான், அந்த வழியாக மட்டும் செல்வேன். வாதி மற்றும் பிரதிவாதிகளின் சொத்தின் வழியாக செல்வேன் என்று என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. வாதி வழக்கு சொத்தில் முந்திரி உடைக்கும் நிறுவனத்தை நடத்தி வந்தார் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண பத்திரிக்கை எங்கு வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லியதின் பேரில் வழக்கறிஞர் தயார் செய்தார். என்னுடைய பிரமாண பத்திரிக்கையின் 2 வது பத்தியில் " மேற்படி பாக பத்திரத்தில் வாதியின் பாக்த்திற்கு வைக்கப்பட்ட தாவா சொத்தில் வாதி முந்திரி தொழில் சம்மந்தமான ஒரு கட்டிடத்தை கட்டி அதில் தொழில் செய்து வந்தார்" என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், ஆனால் அவர் அந்த தொழில் செய்யவில்லை. என் வாக்குமூலத்தில் வாதி முந்திரி தொழில் செய்யவில்லை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு ஊர் வழியாக செல்லும் வழியை வாதி பயன்படுத்தி வந்ததாக சொல்லியுள்ள நிலையில் அந்த வழியின் சர்வே எண்ணை குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள ஊர் வழியில் சென்றால் வழக்கு சொத்திற்கு செல்ல முடியாது என்றும் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள வழியாக மட்டும் தான் வழக்கு சொத்திற்கு சென்றடைய முடியும் என்றால் சரியல்ல.

5. பிரதிவாதிகள் எனக்கு உறவினரா, நண்பரா என்றால் பக்கத்து நிலத்துக்காரர். நானும் பிரதிவாதிகளும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகள் பக்கத்து நிலத்துக்காரர் என்பதாலும் ஒரே ஊரை சேர்ந்தவர்

PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2026.02.04 17:39:58 +0530

என்பதாலும் வாதியின் மீது உள்ள விரோதத்தாலும் பிரதிவாதிகளுக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

PONVENTHAN D

Digitally signed by PONVENTHAN D
Date: 2026.02.04 17:40:03 +0530

District Munsif

Vanur.